எச் டி எஃப் சி பேங்க்
நாங்கள் உங்கள் உலகை புரிந்து கொண்டுள்ளோம்

ஒதுக்கீட்டு தேதி: ____________ எல் சி குறியீடு: ____________ எல் ஜி குறியீடு: ____________

# ஜாயின்ட் ஹைரர்களுக்கான, லாக்கர் வாடகைக்கு எடுப்பதற்கான ஒப்பந்தம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிளை பெயர் | | கிளை குறியீடு | | லாக்கர் வரிசை மற்றும் எண் | | சாவி எண் | 1-ம் ஹைரரின் புகைப்படம் | 2-ம் ஹைரரின் புகைப்படம் | 3-ம் ஹைரரின் புகைப்படம் |
| லாக்கர் அளவு | | கிளை நகரம் பிரிவு | | இயங்கும் முறை : | | | | | |
| வாடகை ரெகவரிக்கான அக்கவுண்ட் | | வாடிக்கையாளர் ஐடி | | விலக்கு% : | சேவையளிக்கப்படும் வாடிக்கையாளர் | ☐ முதல் லாக்கர்<br>☐ அடுத்த லாக்கர் | | | |
| ரேக் விகிதம் | | வசூலிக்கப்பட வேண்டிய வாடகை | | விலக்குக்கான காரணம் : | | | | | |

எச் டி எஃப் சி பேங்க் லிமிடெட், ______________________ (கிளை பெயர்) (இனிமேற்பட்டு 'வங்கி' என்று அழைக்கப்படும்),

______________________
(ஹைரர்/ஹைரர்களின் பெயர் மற்றும் முகவரி)

______________________ (இனிமேற்பட்டு ஹைரர்/ஹைரர்கள் என்று அழைக்கப்படுவர்) அவர்களுக்கு லாக்கரை வாடகைக்கு விட ஒப்புக் கொள்கிறது, மற்றும் ஹைரர்/ஹைரர்கள், இது தொடர்பாக, அவ்வப்போது மாறிவரும் வங்கியின் விதிகளுக்கும், இங்கு பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இணங்கி, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி நிர்ணயிக்கப்பட்டாலொழிய மற்றும் நிர்ணயிக்கப்படும் வரை, வங்கியின் **லாக்கர் எண்** __________ ஐ **('லாக்கர்')** , இந்தத் தேதியிலிருந்து __________ வருடங்களுக்கு, வருடத்திற்கு ரூ. __________க்கு, கட்டணத்தை முன்பே செலுத்த வேண்டும் என்பதன் அடிப்படையில் வாடகைக்கு எடுக்க ஒப்புக் கொள்கின்றனர். லாக்கர் வாடகையை வசூலிப்பது தொடர்பாக, ஒவ்வொரு ஆண்டும் மேற்கண்ட அக்கவுண்ட் எண்ணிலிருந்து வாடகைப் பணம் அட்வான்ஸாக டெபிட் செய்ய வங்கிக்கு ஹைரர்/ஹைரர்கள் அனுமதியளிக்கின்றனர். இதன் பிறகு ஹைரர்/ஹைரர்கள், அத்தகைய காலகட்டத்திற்கு, அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, காலத்திற்கேற்ப வங்கியால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அத்தகைய விகிதம்/விகிதங்களில் வாடகை முழுவதையும் முன்பணமாக செலுத்தி தொடரலாம்.

**நாமினி:** ☐ **ஆம்** (ஆம் என்றால், கீழ்க்கண்ட நாமினேஷன் விபரங்களை பூர்த்தி செய்யவும்) / **பொருந்தாது என்றால், தயவுசெய்து அடித்து விடவும்.**

## ஜாயின்ட் ஹைரர் (ஹைரர்களுக்கான) நாமினேஷன் வடிவம் (ஃபார்ம் SL1A) [பார்க்க பத்தி 1.5.2 (i) (a)]

பேங்கிங் ரெகுலேஷன் சட்டம், 1949, பிரிவு 45ZE என்பதன் கீழ், மற்றும் பேங்கிங் கம்பெனீஸ் (நாமினேஷன்) விதிகள், 1985 என்பதன் விதி 4(2)-ன் படியும், லாக்கர் தொடர்பாக ஜாயின்ட் ஹைரர்கள் செய்யும் நாமினேஷன்

நாங்கள், ______________________
(பெயர் மற்றும் முகவரி)

______________________
(பெயர் மற்றும் முகவரி)

கீழ்க்கண்ட நபரை நாமினியாக நியமிக்கிறோம், எங்களில் ஒருவர் அல்லது அதற்கதிமானோரின் மரணம் நிகழும் பட்சத்தில், ______________________

______________________
(லாக்கர் அமைந்திருக்கும் கிளை/அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி)

இந்த நபருக்கு, எங்களில் உயிருடன் இருப்பவர்(இருப்பவர்கள்) உடன் கூட்டாக, லாக்கரை அணுகும் அனுமதியையும், மற்றும் லாக்கரில் உள்ள பொருட்களை எடுக்கும் சுதந்திரத்தையும் வழங்க கேட்டுக் கொள்கிறோம். விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| நாமினி (நாமினிகளின்) விபரங்கள் | | | |
|---|---|---|---|
| பெயர், முகவர் மற்றும் தொடர்பு எண் | ஹைரருடனான உறவுமுறை | வயது | நாமினி பிறந்த தேதி (மைனர் என்றால்) |
| | | | |
| | | | |

பாதுகாவலர் விபரங்கள் (நாமினி மைனர் என்றால்)

______________________
(பெயர் மற்றும் முகவரி)

**சாட்சி (சாட்சிகளின்) பெயர் (பெயர்கள்), முகவரி (முகவரிகள்) மற்றும் கையெழுத்து (கையெழுத்துக்கள்)@:**

**@பெருவிரல் ரேகை பதித்தால் / வட்டார மொழியில் உறுதியளித்தால் மட்டுமே**

**நாமினேஷன் :** ☐ **இல்லை, நாமினேஷன் செய்ய நான் விரும்பவில்லை**

ஹைரர்/ஹைரர்களாகிய நான்/நாங்கள் இதன் மூலம், மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் விதிகளை படித்து, புரிந்து கொண்டோம் மற்றும் அவற்றைப் பின்பற்றி, அவற்றிற்கு கட்டுப்பட சம்மதிக்கிறோம் என்று உறுதி செய்கிறோம். இத்துடன், வங்கியால் ஸீல்டு நிலையில் லாக்கர் எண் __________க்கான சாவி எண் __________ ஹைரர் / ஹைரர்களுக்கு அளிக்கப்பட்டது மற்றும் அது கிடைக்கப்பெற்றது என்பது அவர்களால் உறுதி செய்யப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின் பொருளடக்கம் மற்றும் பின்பக்கம் பிரிண்ட் செய்யப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஹைரர்/ஹைரர்களால் படிக்கப்பட்டு, புரிந்து கொள்ளப்பட்டது, மற்றும் பின்பக்கம் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தின் உட்பிரிவையும் ஒப்புக் கொள்கிறார்கள், மற்றும் அதன்படி நடக்கவும், அதற்கு கட்டுப்படவும் சம்மதிக்கிறார்கள். ஒப்பந்தம் மற்றும் பின்பக்கம் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஒரு நகல் ஹைரர்/ஹைரர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

| விண்ணப்பதாரர்கள் | பெயர் | வாடிக்கையாளர் ஐ டி | கையெழுத்து |
|---|---|---|---|
| 1-ம் ஹோல்டர் | | | |
| 2-ம் ஹோல்டர் | | | |
| 3-ம் ஹோல்டர் | | | |

குறிப்பு : தயவுசெய்து படிவத்தில் கையெழுத்திடுமுன் உரிய அனைத்து பிரிவுகளும் முழுமையாக, உங்கள் திருப்திக்கேற்ப பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவும்.

எச் டி எஃப் சி பேங்க் லிட். சார்பாக (அங்கீகரிக்கப்பட்ட நபரின் கையெழுத்து) ______________________

தேதி: ______________ இடம்: ______________

# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. பாதுகாப்பு பெட்டகம் அலுவலக நேரங்களில், ஞாயிற்றுக்கிழமை மற்றும் வங்கி விடுமுறைகள் தவிர்த்து, தினமும் திறந்திருக்கும். மேற்குறிப்பிடப்பட்ட நாட்களிலும், குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களிலும் ஹைரர்/ஹைரர்கள் லாக்கரை அணுகலாம்.

2. லாக்கரை அணுகுவதற்கான மேற்கண்ட நேரங்களை மாற்றும் சுதந்திரம் வங்கிக்கு உள்ளது மற்றும் அதற்கு தேவையென கருதும் அத்தகைய நிபந்தனைகளை வங்கி சேர்க்கலாம், மற்றும் அது குறித்து ஹைரர்/ஹைரர்களுக்கு அறிக்கை அனுப்பலாம் மற்றும் ஹைரர்/ஹைரர்கள் அதற்கு கட்டுப்பட்டவராவர்.

3. ஹைரர்/ஹைரர்கள், வங்கியால் பரிந்துரைக்கப்படும், அவ்வப்போது புதுப்பிக்கப்படும், லாக்கரை அணுகும் முறை மற்றும் ஹைரர்/ஹைரர்கள் அல்லது அவரது/அவர்களது ஏஜென்ட்டின் (நியமிக்கப்பட்டிருந்தால்) அடையாளச் சான்று தொடர்பான அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை பின்பற்ற வேண்டும்.

4. ஜாயின்ட் ஹைரர்/ஹைரர்களிடையே ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால், ஜாயின்ட் ஹைரர்/ ஹைரர்களில் ஏதேனும் ஒரு நபர் லாக்கர் இயக்குதலை நிறுத்தக் கோரலாம், எனினும், லாக்கர் இயக்க அறிவுருத்தல்களில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமானால், அதற்கான கோரிக்கையில் ஜாயின்ட் ஹைரர்/ ஹைரர்கள் அனைவரும் கையெழுத்திட்ட பிறகே வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. லாக்கரை இயக்க ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஏஜன்ட்டை ஹைரர்/ஹைரர்கள் நியமிக்க விரும்பினால்; ஹைரர்/ஹைரர்கள், அத்தகைய ஒரு ஏஜன்ட்டின் பெயரில் ஒரு பவர் ஆஃப் அட்டர்னியையும், மற்றும் அல்லது அந்த நோக்கம் தொடர்பாக வங்கிக்குத் தேவைப்படும் ஆவணங்களையும் செயல்படுத்த வேண்டும் மற்றும் வங்கியால் அது குறித்து பரிந்துரைக்கப்படும், அவ்வப்போது புதுப்பிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அந்த ஏஜன்ட் பின்பற்றுவார். எனினும், அத்தகைய ஏஜன்ட் லாக்கரை அணுக அனுமதிப்பதன் மூலம், எந்த நேரத்திலும் வங்கி பொறுப்பாகாது, அல்லது எந்தவொரு இழப்பையும் ஏற்காது, மற்றும் லாக்கர் இயக்குவது தொடர்பாக அத்தகைய ஏஜன்ட் வங்கிக்கு எதிராக மேற்கொள்ளும் எந்தவொரு அல்லது அனைத்து கோரிக்கைகள் மற்றும் உத்தரவுகளுக்கு எதிராக ஹைரர்/ஹைரர்கள் வங்கிக்கு காப்புறுதி அளிக்க வேண்டும் மற்றும் தொடர்ந்து அளித்து வங்கிக்கு தீங்கு நேராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். அவசியம் என்று கருதினால், வங்கி அத்தகைய ஏஜன்ட்டிற்கு லாக்கரை இயக்கும் அனுமதியையும் மறுக்கலாம்.

6. ஜாயின்ட் ஹைரர்/ஹைரர்களில் ஒருவரின் இறப்பு நேர்ந்தால், அவர்களில் உயிருடன் இருப்பவர்/சட்ட வாரிசுகள்/நியமிக்கப்பட்டவர்கள், வங்கி முடிவு செய்யும் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி லாக்கரை இயக்க உரிமை பெறுவார்கள், வங்கி நிர்ணயிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க, உயிருடன் இருப்பவர்/இருப்பவர்கள் வாடகை லாக்கரை தம் பெயரில் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் அல்லது அதிலிருக்கும் பொருட்களை அப்புறப்படுத்தி காலி செய்து லாக்கரையும், லாக்கர் சாவியையும் வங்கிக்கு சரண்டர் செய்யலாம். உயிருடன் இருப்பவர்கள்/ நாமினிகள்/சட்ட வாரிசுகள் தவிர மற்ற எந்தவொரு நபர்களின் கோரிக்கைகள் எழுந்தால் வங்கி அதற்கு பொறுப்பாகாது. லாக்கரில் உள்ள பொருட்களை வங்கியின் நாமினேஷன் விதிகளின் கீழ் ஏதேனும் நபரை/நபர்களை ஹைரர்/ஹைரர்கள் நியமிக்கும் பட்சத்தில், நாமினேஷன் அறிவுருத்தல்களின் அடிப்படையில் லாக்கரில் உள்ளவை நியமிக்கப்பட்டவரிடம் ஒப்படைக்கப்படும்.

7. தேவையான பொழுது லாக்கரின் நிலையை சோதனை செய்யவும், ஏதேனும் பழுது ஏற்பட்டிருந்தால் அதை சரி செய்யவும், அத்துடன் இங்களிக்கப்பட்டிருக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி லாக்கர் பயன்படுத்தப்படுகிறதா என்பதை உறுதி செய்யவும், வங்கி லாக்கரை அணுக ஹைரர்/ ஹைரர்கள் அனுமதிக்க வேண்டும். ஆனால் அதிலிருக்கும் பொருட்கள் பற்றி வங்கி அறியாது மற்றும் அதற்கு பொறுப்பும் ஆகாது.

8. நடைபெறும் ஆண்டின் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன்பே, வரப்போகும் ஆண்டிற்கான ஒப்புக் கொள்ளப்பட்ட வாடகை கட்டணங்கள் அனைத்தும் முன்பே கட்டப்பட வேண்டும் மற்றும் லாக்கர் வசதியை அளிக்க மறுக்கும் உரிமையும் வங்கிக்கு உள்ளது. கேட்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும் வாடகை செலுத்தாத பட்சத்தில், அல்லது ஏதேனும் அதிகரிக்கப்பட்ட வாடகை இருந்தால் (இருக்கும் என்று அர்த்தமில்லை), அத்தகைய வாடகைத் தொகை, ஹைரரின்/ஹைரர்களின் வங்கிக் கணக்கிலிருந்து, உரிய தேதிக்குள் மேற்கொண்டு தகவல் தெரிவிக்காமல் வங்கி டெபிட் செய்யலாம் என்பதற்கு ஹைரர்/ஹைரர்கள் வங்கிக்கு அனுமதியளிக்கிறார்கள். வாடகை பாக்கியானது, ஆண்டுக்கு 18% வட்டி விகிதத்தில் முழுமையாக வங்கிக்கு உடனடியாக செலுத்தப்பட வேண்டும்.

9. அவ்வப்போது நிலவும் வரிக்கேற்ப லாக்கர் வாடகையில் வரி உட்படும்.

10. தனது முழுமையான நிர்ணயப்படி வாடகையை மாற்றும்/உயர்த்தும் உரிமை வங்கிக்கு எப்போதும் உள்ளது மற்றும் ஹைரர்/ஹைரர்கள் அதனை வங்கி நிர்ணயிக்கும் அத்தகைய தேதிகளில் செலுத்த கடமைப்பட்டுள்ளனர்.

11. வாடிக்கையாளர் வாடகைக்கெடுத்த லாக்கர் சாவி, அனைத்து ஜாயின்ட் ஹைரர்களுக்கும் ஜாயின்ட்டாக அளிக்கப்படும். இந்த சாவி எப்போதும் வங்கிக்கு சொந்தமானதாக இருக்கும். இதற்கான மாஸ்டர் சாவி எப்போதும் வங்கியிடம் இருக்கும். லாக்கரானது, இந்த இரண்டு சாவிகளையும் பயன்படுத்தி மட்டுமே திறக்க முடியும் மற்றும் ஒற்றை சாவியால் முடியாது என்பது ஹைரர்/ஹைரர்களால் புரிந்து கொள்ளப்பட வேண்டும். மேலும், லாக்கரை மூட மாஸ்டர் சாவி தேவைப்படாது. ஹைரர்/ஹைரர்கள், லாக்கரை வாடிக்கையாளர் சாவியால் மட்டுமே இயக்க அனுமதிக்கப்படுவர் மற்றும் வங்கியால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாவி அல்லாத எந்தவொரு சாவியாலும் லாக்கரை இயக்க அனுமதிக்கப்படாது.

12. ஹைரர்/ஹைரர்களால் வாடிக்கையாளர் சாவி தொலைக்கப்பட்டால், சாவி தொலைந்தது பற்றி தாமதமின்றி எழுத்துமூலமாக வங்கிக்கு தெரியப்படுத்த வேண்டும் மற்றும் ஹைரர்/ஹைரர்களின் எழுத்துமூலக் கோரிக்கை, அத்துடன் ஒரு இழப்பு எதிர்ப்புக் காப்புறுதி மற்றும் எஃப் ஐ ஆர்/போலீஸ் கம்பிளெயின்ட் அக்னாலெட்ஜ்மென்ட் ஆகியவற்றை சமர்ப்பிப்பதன் அடிப்படையில் ஹைரர்/ ஹைரர்களுக்கு ஒரு புதிய சாவி வழங்கப்படும். லாக்கரை உடைத்து திறக்கும் செயல்முறையின் போது அனைத்து ஹைரர்களும் அங்கிருக்க வேண்டும். லாக்கரை உடைத்து திறப்பதற்கு, புதிய சாவிக்கு மற்றும் லாக்கை மாற்றுவதற்காகும் செலவுகளை ஹைரர்/ஹைரர்கள் செலுத்த வேண்டும். லாக்கர், லாக் அல்லது சாவிக்கு மேற்கொள்ளத் தேவைப்படும் ரிப்பேர்கள் அனைத்தும், வங்கியினால் அமர்த்தப்பட்ட பணியாளர்களால் பிரத்யேகமாக செய்யப்படும்.

13. ஹைரர்/ஹைரர்கள் அவரது/அவர்களது லாக்கரின் வாடிக்கையாளர் சாவியை பாதுகாப்பான ஒரு இடத்தில் வைக்க வேண்டும் மற்றும் அவரது/அவர்களது லாக்கர் எண் மற்றும்/அல்லது அவர்களது பாஸ்வேர்டை (ஏதேனும் கொடுக்கப்பட்டிருந்தால்) அவர்கள் வேறெந்தவொரு நபருக்கும் தெரிவிக்கக்கூடாது மற்றும் தங்கள் வாடிக்கையாளர் சாவியை தனது/தங்களது அங்கீகரிக்கப்பட்ட ஏஜன்ட் (நியமிக்கப்பட்டிருந்தால்) தவிர்த்து வேறொருவரிடமும் கொடுக்கக்கூடாது. வாடிக்கையாளர் சாவி கிடைக்கப்பெற்றது என்பதற்கு ஹைரர்/ஹைரர்கள் ஒப்புகை அளிக்க வேண்டும், மற்றும் இந்த ஒப்பந்தம் ரத்தானதும் அந்த சாவியை வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும்.

14. லாக்கரை சரண்டர் செய்யும் போது அனைத்து ஹைரர்களும் லாக்கர் கிளையில் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

15. ஹைரர்/ஹைரர்களுக்கு லாக்கர் சொந்தமாகாது, இந்த ஒப்பந்தம் தொடரும் வரை அவர்கள் அதனை தனிப்பட்ட வகையில் பயன்படுத்தி கொள்ளும் உரிமை மட்டுமே அவர்களுக்கு உள்ளது, அதுவும் அதிலளிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மட்டுமே. லாக்கரை அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியை ஹைரர்/ஹைரர்கள் வேறொருவருக்கு நியமிக்கவோ, மாற்றிக் கொடுக்கவோ அல்லது கீழ்க்குத்தகைக்கு விடவோ முடியாது, அல்லது ஆவணங்கள், நகைகள் அல்லது இதர மதிப்புள்ள பொருட்களை பாதுகாப்பது தவிர வேறெந்த நோக்கத்திற்காகவும் அதைப் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது, மற்றும் அதனை ஏதேனும் வெடிமருந்தின் பொருட்கள் அல்லது நாசம் ஏற்படுத்தக்கூடிய அல்லது தாக்கக்கூடிய பொருட்கள் அல்லது வங்கியின் கருத்தில் ஒரு தொல்லை ஏற்படுத்தக்கூடிய வகை பொருட்கள் எதையும் வைக்க பயன்படுத்தக்கூடாது. இந்த விதிமுறைக்கு முரணாக ஹைரர்/ஹைரர்கள் லாக்கரை பயன்படுத்தியதன் காரணமாக வங்கிக்கு எற்படும் ஏதேனும் கோரிக்கை, கிளெயிம், இழப்பு, சேதங்கள், செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றிற்கு எதிராக இழப்பு காப்புறுதியை வங்கிக்கு ஹைரர்/ஹைரர்கள் வழங்க வேண்டும். மேற்கண்ட நிபந்தனை பின்பற்றப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்ய லாக்கரில் உள்ளவற்றை வங்கிக்கு தேவைப்படும் போது சோதனை செய்ய வங்கியை ஹைரர்/ஹைரர்கள் அனுமதிக்க வேண்டும்.

16. வங்கியின் தனிப்பட்ட தேர்வைப் பொறுத்து, கேட்கப்பட்டாலும் அல்லது கேட்கப்படாவிட்டாலும் வாடகை மற்றும் உரிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய வேறு எந்த கட்டணங்களும் ஹைரர்/ ஹைரர்களால் செலுத்தப்படாத பட்சத்தில், அல்லது இங்கு கொடுக்கப்பட்டுள்ள எந்தவொரு நிபந்தனைகளும் அவர்களால் மீறப்படும் பட்சத்தில், வங்கியானது, ஹைரர்/ஹைரர்கள் லாக்கரை பயன்படுத்துவது தொடர்பான, ஹைரர்/ஹைரர்களின் அனைத்து உரிமைகளுக்கும் எதிராக வங்கிக்கு இருக்கும் வேறு எந்தவொரு தீர்வுகளுக்கும் எந்த பாரபட்சமுமின்றி கைவிட்டுவிடும், மற்றும் வங்கியானது, ரெஜிஸ்டர்டு போஸ்ட் மூலமாக ஹைரர்/ஹைரர்களின் தெரிந்த, கடைசி முகவரிக்கு ரிட்டர்ன் நோட்டீஸ் அனுப்பிய முப்பது நாட்களுக்குப் பிறகு லாக்கரை உடைத்து திறந்து, அதிலுள்ள அனைத்து அல்லது ஏதேனும் பொருட்களை பொது ஏலத்தின் மூலம் அல்லது தனியார் ஒப்பந்தம் மூலம் விற்று, தனது வாடகை பாக்கி மற்றும்/அல்லது மேற்கண்டவை தொடர்பான இதர கட்டணங்கள், செலவுகள் போன்றவற்றை லாக்கரில் உள்ளவற்றை விற்றதன் மூலம் கிடைத்த தொகையில் வசூலித்துக் கொள்ளும் மற்றும் ஏதேனும் அதிகப்படி தொகையிருந்தால் அல்லது ஏதேனும் பொருட்கள் மீதமிருந்தால், அத்தகைய மீதமுள்ள பொருட்களை பே ஆர்டர் அல்லது டிமாண்டு மூலம், ஹைரர்/ ஹைரர்களின் அபாயம் மற்றும் பொறுப்பில் அவரது/அவர்களது பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும் அல்லது அவற்றை இத்தகைய வாடகை செலுத்தப்பட வேண்டிய இது போன்ற லாக்கர் அல்லது இடத்தில் அல்லது அது முதல் எந்த வட்டியும் செலுத்த தேவையில்லாத அக்கவுண்ட்டில், வங்கி எது உசிதம் என்று கருதுகிறதோ அதன் படி சேமித்து வைக்கும். ஓராண்டுக்கு மேல் லாக்கர் இயக்கப்படாமலிருந்தால், வங்கி தன் சொந்த முடிவின் படி லாக்கர் ஒதுக்கீட்டை ரத்து செய்யும் மற்றும் வாடகை சரியான முறையில் அளிக்கப்பட்டு வந்திருந்தாலும் கூட, லாக்கரை திறந்து பார்க்கும்.

17. இரு தரப்பினரில் ஒருவர் மற்றவருக்கு, ஒப்புக் கொள்ளப்பட்ட வாடகை காலம் நிறைவடையும் தேதிக்கு முப்பது நாட்களுக்கு முன் இந்த ஒப்பந்தத்தை முடிவு செய்யும் நோக்கத்தை குறிப்பிட்டு எழுத்துமூல முன்னறிவிப்பு நோட்டீஸ் அளிக்க வேண்டும் மற்றும் ஹைரர்/ஹைரர்கள், அறிவிப்பு முடிவடையும் கடைசி நாளன்று அல்லது அதற்கு முன் லாக்கரின் வாடிக்கையாளர் சாவியை வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும். ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டால், ஏற்கனவே ஹைரர்/ஹைரர்கள் செலுத்திய அட்வான்ஸ் வாடகைப் பணத்தை வங்கி திருப்பியளிக்காது.

18. மேற்கண்டவாறு அத்தகைய நோட்டீஸ் எதுவும் அனுப்பப்படாவிட்டால் மற்றும் வாடிக்கையாளர் சாவி ஹைரர்/ஹைரர்களால் திருப்பியளிக்கப்படாவிட்டால், வங்கியின் தேர்வுப்படி, ஒப்புக் கொள்ளப்பட்ட வாடகைக் காலம் காலாவதியான தேதிக்குப் பிறகு லாக்கர் வாடகைக்கு எடுப்பது புதுப்பிக்கப்படும், ஆனால் இந்நிலையானது, இடைப்பட்ட காலத்தில் வங்கி சேர்த்துக் கொண்டுள்ள உரிமைகளுக்கு பங்கம் ஏற்படாதவாறு இருக்கும்.

19. மிக முக்கியமான அல்லது அவசர தேவை காரணங்களுக்காக, அவசியம் என்று வங்கி கருதும் அத்தகைய காலகட்டத்திற்கு பாதுகாப்பு பெட்டகத்தை மூடி வைக்கும் மற்றும் ஹைரர்/ஹைரர்களுக்கு எந்தவித முன்னறிவிப்பும் தெரிவிக்காமல் லாக்கரை அணுக அனுமதி மறுக்கும் மற்றும் அல்லது ஹைரர் / ஹைரர்களை அழைத்து தங்கள் லாக்கரில் உள்ளவற்றை உடனடியாக காலி செய்ய சொல்லும் உரிமை வங்கிக்கு உள்ளது மற்றும் இந்த உத்தரவைப் பின்பற்றாததால் எழக்கூடிய அனைத்து விளைவுகளுக்கும் ஹைரர் / ஹைரர்கள் பொறுப்பாவார்கள்.

20. லாக்கரை இயக்குவதற்கான பாதுகாப்பு பெட்டக கதவுகள் அல்லது லாக்குகள் செயலிழப்பு காரணமாக ஏற்படும் எதேனும் தாமதத்தின் காரணமாக விளையும் அல்லது எழும் எந்தவொரு சேதம் அல்லது இழப்புக்கு வங்கி பொறுப்பாகாது.

21. லாக்கரை உடைத்து திறக்கும்/லாக்கரில் உள்ள பொருட்களை பட்டியலிடும் மற்றும்/அல்லது லாக்கர் மற்றும் அதிலுள்ள பொருட்களை, நீதிமன்றத்தின் சட்ட உத்திரவுகளுக்கிணங்க அல்லது எந்தவொரு சட்டத்தின் கீழ் அதற்கிருக்கும் அதிகாரத்திற்கிணங்க எந்தவொரு நபர்/நபர்களிடமும் ஒப்படைக்கும் முழுமையான உரிமை வங்கிக்கு உள்ளது மற்றும் அத்தகைய சூழ்நிலையில், லாக்கரில் உள்ள பொருட்களுக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பாகாது.

22. ஹைரர்/ஹைரர்களின் முகவரியில் மாற்றம் இருந்தால், எந்தவித தாமதமுமின்றி அதனை ஹைரர்/ ஹைரர்கள் எழுத்து மூலமாக வங்கிக்கு தெரிவிக்க வேண்டும் மற்றும் வங்கியின் பதிவுகளில் பதிவாகியுள்ளபடி ஹைரர்/ஹைரர்களின் பதிவு அலுவலகத்திற்கு தபால் மூலம் வங்கியால் அனுப்பப்படும் எந்தவொரு தகவல் அறிவிப்பும் உரிய முறையில் செயல்படுத்தப்பட்டதாக கருதப்படும்.

23. இந்த ஒப்பந்தம் தொடரும் காலத்தில், மழை, தீ, வெள்ளம், பூகம்பம், மின்னல், சமூக கலகம், போர், கலவரம் அல்லது வங்கியின் கட்டுப்பாட்டிலில்லாத வேறு ஏதேனும் காரணம்/காரணங்களால் லாக்கரில் உள்ள பொருட்களுக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பு அல்லது சீரழிவு அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பாகாது, அதே போல், ஹைரர்/ஹைரர்கள் லாக்கருக்கு வெளியே ஏதேனும் பொருட்களை விட்டுச் செல்வதால் அவர்களுக்கு நேரும் ஏதேனும் இழப்பிற்கும் வங்கி பொறுப்பாகாது.

24. வங்கிக்கும், ஹைரர்/ஹைரர்களுக்குமிடையேயான உறவு, வாடகைக்கு எடுத்திருப்பவர் மற்றும் வாடகைக்கு கொடுத்திருப்பவருக்கு இடையேயான உறவாகுமேயல்லாமல், ஒரு வங்கி மற்றும் வாடிக்கையாளருக்கு இடையேயானது அல்ல என்பது தெளிவாக புரிந்து கொள்ளப்பட வேண்டியது.

25. லாக்கரில் இருக்கும் அனைத்து பொருட்களையும் வங்கி பெற்று, தக்க வைத்துக் கொள்வது, ஹைரர்/ ஹைரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கீழ்க்கண்ட கட்டணங்களை செலுத்தாத பட்சத்தில் வங்கியானது லாக்கரில் உள்ளவற்றை அல்லது ஒரு பகுதியை விற்று அந்தக் கட்டணங்களை வசூலிக்கும் உரிமை கொண்டது என்ற பொது உரிமைக்கு உட்பட்டது.

26. வங்கி அவசியம் என கருதும் அனைத்து வழக்கமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் வங்கி செயல்படுத்தும் என்றாலும், லாக்கரில் வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு ஏற்படும் ஏதேனும் இழப்புக்கு அல்லது சேதத்துக்கு வங்கி பொறுப்பேற்காது. அதனால், வங்கி லாக்கரில் ஹைரர்/ ஹைரர்கள் வைக்கும் ஏதேனும் விலை மதிப்புள்ள பொருட்களை தங்களின் சொந்த நலன் கருதி தாங்களே சொந்தமாக இன்ஷூர் செய்து கொள்ள வேண்டும் என்று அறிவுருத்தப்படுகிறது.

27. ஹைரர்/ஹைரர்கள் லாக்கரை வாடகைக்கு எடுப்பது குறித்து வங்கியால் அந்தந்த காலகட்டத்தில் பரிந்துரைத்து, அமுல்படுத்தப்படும் விதிகள் மற்றும் விதிமுறைகளை ஹைரர்/ஹைரர்கள் பின்பற்ற சம்மதிக்கிறார்கள்.

28. இங்கே கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும் ஹைரர்/ஹைரர்கள் மீறிய காரணத்தால் வங்கிக்கு ஏற்படக்கூடிய அல்லது வங்கிக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய அனைத்து அல்லது ஏதேனும் இழப்பு, சேதங்கள், செலவுகள், கட்டணங்கள், நடவடிக்கைகள், வழக்குகள் ஆகியவற்றிலிருந்து ஹைரர்/ஹைரர்கள் வங்கிக்கு இழப்பு காப்புறுதி அளிக்க வேண்டும் மற்றும் தொடர்ந்து காப்புறுதி அளித்து எல்லா நேரங்களிலும் வங்கிக்கு தீங்கு நேராமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு ஹைரர்/ஹைரர்களுக்குள்ளது.

29. இது தொடர்பாக விளையும் எல்லா விஷயங்கள்/பிரச்சனைகளுக்காக மற்றும் லாக்கர் வாடகைக்கு எடுக்கும் நோக்கத்திற்காக, சம்பந்தப்பட்ட தரப்பினர், இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள மும்பை நீதிமன்றங்களின் பிரத்யேக சட்ட வரம்புகளுக்கு உட்படுவர்.

30. லாக்கர் ஒதுக்கீடு செய்யும் நேரத்தில், வங்கி தன் சுய விருப்பப்படி, ஜாயின்ட் ஹைரர்/ ஹைரர்களிடமிருந்து லாக்கர் வாடகையை வசூலிக்க ஒரு பாதுகாப்புக்காக ஒரு வைப்பு நிதியை அவர்களிடமிருந்து பெறலாம். லாக்கர் வாடகையை ஜாயின்ட் ஹைரர்/ஹைரர்கள் செலுத்த தவறும் பட்சத்தில், அதை வசூலிக்க மேற்குறிப்பிட்ட வைப்பு நிதியைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை வங்கிக்குள்ளது.

31. இந்த ஒப்பந்தத்தின் ஒரு நகலை நாங்கள் பெற்றுக் கொண்டோம் என்பதை உறுதி செய்கிறோம்.

## வங்கி பயன்பாட்டிற்கு மட்டுமே

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உரிய வாடகை பெறப்பட்டது (ரூ) | பெற்ற தேதி:<br><br>சி பி யு-க்கு அனுப்பிய தேதி | அங்கீகரித்து, சரிபார்த்தது: | எஸ் டி பி எண்: | சரிபார்த்தவர் கையெழுத்து (கையெழுத்துக்கள்) (முதலெழுத்துக்கள்): | லாக்கர் கஸ்டோடியனின் பெயர், கையெழுத்து மற்றும் ஊழியர் குறியீடு | கிளை மேலாளர் / பேக்-அப் பெயர், கையெழுத்து மற்றும் ஊழியர் குறியீடு |